தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன் கிழமை, 1981 பிப்ரவரி 4

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

> ''வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
> மற்றைய எல்லாம் பிற''

ஒரு செயலை அடுத்து வினை என்று சொல்லப்படுவது, ஒருவருடைய உள்ளத்து உறுதியாகும். மற்றவையெல்லாம் இதற்கு அடுத்ததாகவே கொள்ளுதல் வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று முன் தினம் ஒத்திவைக்கப் பெற்ற வினாக்கள் இப்போது எடுத்துக் கொள்ளப் படும்.

வேடசந்தூர் தாலூகாவில் சிமெண்ட் தொழிற்சாலை.

வினா எண் 158—**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேடசந்தூர் தாலூகாவில் அதிக அளவில் கிடைக்கும் சிமெண்ட் உற்பத்திக்கான மூலப் பொருட்களைக் கொண்டு அப்பகுதியில் அரசுத் தரப்பில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஆம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையத்தில் தொடங்க இருக்கும் இந்த சிமெண்ட் தொழிற்சாலைக்கு எவ்வளவு மூல

தனம் என்பதையும், எத்தனை பேர்களுக்கு அந்தப் பகுதியிலே வேலை வாய்ப்பு கிடைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், வேடசந்தூர் பாளையத்திற்கும், திருச்சி மாவட்டம் வாரணாசிக்கும் இடைப்பட்ட பகுதியில் 4 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட ஆலை ஒன்று ஏறக்குறைய 32 கோடி ரூபாய் மதிப்பீட்டளவில் நேரடியாக 1,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கின்ற விதத்தில் துவங்குவதற்கான ஆய்வுகள் நடந்து வருகின்றன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையில் இப்படி ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதைக் கருத்தில் கொண்டு, அங்கு தனியார் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க அந்தப் பகுதியிலே இருக்கின்ற நிலங்களை விலைக்கு வாங்க முற்படுவது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் தரப்பிலே துவங்கப்பட இருக்கின்ற தொழிற்சாலைக்குத் தேவைப்படுகின்ற நிலப்பரப்பு வேறு எந்தத் தனி நபருக்கோ அல்லது தனி நிறுவனத்திற்கோ வழங்கப்பட மாட்டாது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாளையத்திற்கு ஒட்டினாற்போல் இருக்கும் கிருஷ்ணாபுரம் என்னுடைய தொகுதியாகும். அந்தத் தொகுதியில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க இந்த அரசு முன் வருமா ? அந்தத் தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ஒரு மாவட்டத்திலே ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுகின்றபோது., அந்த மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலே இருந்துதான் நம்பர்களைக் கேட்டு வேலைக்கு ஆள் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அந்த மாவட்டத்திலே உள்ள பகுதிகளிலே உள்ளவர்களுக்கும் வேலை வாய்ப்பு பெறுகின்ற வாய்ப்பு நிச்சயமாக இருக்கிறது.

1981 பிப்ரவரி 4]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த சிமெண்ட் தொழிற்சாலை ஒன்று மாயவரம் தாலூகாவிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி வேடசந்தூரைப் பற்றியது. திரு. வரதராஜன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த வேசடந்தூர் வட்டாரத்தில், பாளையம் பகுதி ஒரு பாலைவனம் போன்ற பகுதியாகும். இப்படிப்பட்ட வறட்சியான காலத்திலே, ஆரம்ப வேலைகளை அங்கே துவக்கினால் அந்த மக்களுக்கு உதவியாக இருக்கும். எவ்வளவு விரைவிலே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு வேலைகள் முடிந்தவுடன் வெகு விரைவிலே எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தாலூகாவிலே, இந்த சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான ஆய்வு வேலைகள் நடைபெறுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். திருச்சி மாவட்டத்திலே, இந்த சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான மூலப் பொருள்கள் கிடைக்கின்ற காரணத்தினாலே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இக்கேள்வி வேடசந்தூர் பற்றியது. கிட்டப்பா அவர்களுக்கு ஒரு நியதி. உங்களுக்கு ஒரு நியதி அல்ல. உட்காருங்கள்.

திரு. இரா. கருப்பையா : வேடசந்தூரில் திருச்சி மாவட்டத்தை ஒட்டிய பகுதியில், பார்டரில் அந்தத் தொழிற்சாலையை அமைப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஏற்கனவே சொன்னேன். மதுரை மாவட்டம் வேடசந்தூர் பாளையத்திற்கும் திருச்சி மாவட்டம் வாரணாசிக்கும் இடைப்பட்ட பகுதியில் கிடைக்கிற சுண்ணாம்புக் கல்லைக் கொண்டு அந்தப் பகுதியில் தொழிற்சாலை ஏற்படும். ஏதாவது ஒரு இடத்தில் தான் ஏற்படுத்த முடியும். சுண்ணாம்புக்கல் இரண்டு மாவட்டத்திலும் எடுக்கப்பட இருக்கிற காரணத்தால் இரண்டு மாவட்டத்திலும் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கிற வகையில் நிச்சயமாக அரசு கவனிக்கும்.

திரு. என். கிட்டப்பா : வேடசந்தூரில் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லப்படுவதைப் போல் ஏற்கனவே மாயூரம் வட்டத்தில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை

ஆரம்பிக்கப்பட இருப்பதாக இதே அவையில் அறிவிக்கப்பட்டதே. அதனுடைய நிலை தற்போது என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

திண்டிவனம் பகுதியில் வனஸ்பதி தொழிற்சாலை.

வினா எண் 159. திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனம் பகுதியில் அரசு துறையில் வனஸ்பதி தொழிற்சாலை துவக்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : வனஸ்பதி தொழிற்சாலை துவக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனம் பகுதியில் தான் அதிக அளவு நிலக்கடலை கிடைக்கிறது. இதற்கு முன்னால் இல்லாவிட்டாலும் இனியாவது அந்த மாதிரி வனஸ்பதி தொழிற்சாலையை ஆரம்பிப்பார்களானால் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதோடு மக்களுக்குக் குறைந்த விலையில் வனஸ்பதி கிடைக்கும். அரசு இனியாவது அது பற்றிப் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : வனஸ்பதி தொழில் பற்றிய மத்திய அரசின் கொள்கையினால் இது அவர்களுடைய புலனாய்வில் இருக்கிறது. தற்போது வனஸ்பதி தொழில் தொடங்குவது பற்றிய விண்ணப்பங்களை மத்திய அரசு ஏற்றுக் கொள்வதில்லை. எனவேதான், அது போன்ற திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

கடலூரில் உரத் தொழிற்சாலை.

வினா எண். 160—திரு. பாபு கோவிந்தராசன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடலூரில் மிகப் பெரிய உரத் தொழிற்சாலை துவக்குவதற்கான திட்டம் உள்ளதா ?